மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் சராசரி 35 என்று குறிப்பிட்டேன். சிலவிடங்களில் அது 40 ஆகக்கூட இருக்கும், சிலவிடங்களில் 20, 25 என்ற அளவில்கூட இருக்கக் கூடும். கூடுமானவரையில் சராசரி எண்ணிக்கையைக் குறைப் பதற்கான வகையில், ஏற்கனவே கூறியபடி நிதிவசதி ஏற்பட ஏற்படக் குறைத்துக்கொண்டுவரலாம்.

Chief Educational Officer for Dharmapuri district.

*275 Thiru B. VENKATASWAMY : Will the Hon. the **Minister** for Education and Local Administration be pleased to **state**—

(*a*) whether any representation has been received from Dharmapuri District M.L.As. requesting to appoint a separate Chief Educational Officer for Dharmapuri district; and

(*b*) if so, when he will be appointed?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) தர்மபுரி மாவட்டத்திற்கெனத் தனியாக முதன்மைக் கல்வி அதிகாரி நியமனம்பற்றிய கருத்து அரசினரால் பரிசீலனை செய்யப்பட்டுத் தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த சீப் எஜுகேஷனல் ஆபீசர் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இருக்கும்போது தர்மபுரிக்கு மட்டுமில்லாமல் தர்மபுரி-சேலத்தைச் சேர்த்து வைக்கப் பட்டிருக்கிறது. தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அங்குள்ள பகுதியினருக்கு அதிருப்தி அளிக்கும் என்ற வகையில் உடனடியாக அப்படி ஒரு அதிகாரியை நியமிப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பெரும் மாவட்டங்களுக்கு ஒரு மாவட்ட தலைமைக் கல்வி அதிகாரி இருந்து வருகிறார். ஏற்கனவே இரண்டு மூன்று மாவட்டங்களை ஒன்றாகச் சேர்த்து டிவிஷனல் இன்ஸ்பெக்டர் என்ற ஒரு அதிகாரி இருந்தார். திருநெல்வேலி, கன்னியாகுமரி இரண்டுக்கும் சேர்த்து ஒரு தலைமைக் கல்வி அதிகாரி, கோவை, நீலகிரிக்கு சேர்த்து ஒரு தலைமை கல்வி அதிகாரி, சேலம்—தர்மபுரிக்கு சேர்த்து ஒரு தலைமைத் கல்வி அதிகாரி என்று போடப்பட்டிருக் கிறது. தர்மபுரி மாவட்டத்திற்குத் தனியாக ஒரு முதன்மைக்

கல்வி அதிகாரி வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். சிறு மாவட்டமாக இருப்பதால் சேலம், தர்மபுரி ஆகியவற்றிற்குச் சேர்த்து ஒருவர் வைக்கலாம் என்றும் இப்போது தனியாகத் தேவையில்லை என்று தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது. டி.இ.ஓ. என்ற அளவில் ஒரு மாவட்டக் கல்வி அதிகாரி இருக்கிறார் எண்ணிக்கை பெருகும்போது வேண்டுமானால் அதைப்பற்றி யோசிக்கலாம். இப்போது தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். சின்னசாமி : தர்மபுரி மாவட்டத்தில் ஏறத்தாழ 100 உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. கல்வி அதிகாரிகள் இரண்டு பேர்கள் இருக்கிறார்கள். தர்மபுரியிலிருந்து சேலத்திற்குச் சென்று முதன்மைக் கல்வி அதிகாரியைச் சந்திக்கவேண்டுமென்றால் எங்களைப் போன்றவர்களுக்கு அதிக நேரம் செலவிட வேண்டியிருக்கிறது. ஆகவே உடனடியாக தர்மபுரி மாவட்டத்திற்கு என்று தனியாக ஒரு முதன்மைக் கல்வி அதிகாரியை நியமிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இரண்டு மூன்று ஆண்டுக் காலத்திற்கு முன்பு, வட ஆர்க்காடு, சேலம், தர்மபுரி, கோவை, நீலகிரி ஆகிய அத்தனை மாவட்டங்களுக்கும் சேர்த்து ஒரு கல்வி அதிகாரி வட ஆர்க்காடு மாவட்டத்தில் இருந்தார்கள். அந்தக் கஷ்டங்களைப் போக்க பெரிய மாவட்டங்களுக்கு ஒவ்வொரு தலைமைக் கல்வி அதிகாரியை நியமித்தோம். இப்போது தர்மபுரிக்கு ஒரு முதன்மைக் கல்வி அதிகாரி தனியாக வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்னை தள்ளி வைக்கப் பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டேன். அறவே நீக்கவில்லை. பிறகு ஆராய்ந்து தேவை ஏற்படும்போது நிறைவேற்றிக் கொள்ளலாம் என்ற அளவில் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : வேலைப் பளுவின் அளவை வைத்து தலைமைக் கல்வி அதிகாரிகளை நியமனம் செய்வதில் ஒரு ஜில்லாவிற்கு ஒன்று என மாற்றுவதுபற்றி அரசாங்கம் புனர் பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்த எண்ணத்தை வைத்துக்கொண்டுதான் இப்போது தள்ளிவைக்கப் பட்டிருக்கிறது. பத்து மாவட்ட தலைமைக் கல்வி அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மேலும் நியமிக்க வேண்டுமென்றால்

கன்னியாகுமரிக்கும், தர்மபுரிக்கும் ஒருவர் என்று நியமிக்க வேண்டிவரும். அது பரிசிலனையில் இருந்து வருகிறது. தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன் : முதன்மைக் கல்வி அதிகாரிகள் ஜில்லாவிற்கு ஒருவர் நியமிப்பதற்கு சமீபத்தில் ஹைதராபாத்திலிருந்து வந்த எக்ஸ்பெர்ட் குழு ஆலோசனை கூறியிருப்பதாகவும், அந்தக் குழு கல்விக்காக ஏராளமான பணம் செலவு செய்யப்பட்டும்கூட கல்வியின் தரம் குறைவாக இருக்கிறது என்றும் குறிப்பிட்டிருப்பதாகப் பத்திரிக்கைகளில் செய்தி பார்த்தோம். அது உண்மையா? கல்வி அதிகாரிகள் அதிகமாக்கப்பட வேண்டும் என்று அவர்கள் யோசனை கூறியுள்ளார்களா ? அதன்பேரில் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அது அரசால் நியமிக்கப்பட்ட குழு அல்ல. கல்வி பற்றி ஆராய்வதற்காகத் திட்டக்குழுவில் டாஸ்க் போர்ஸ் ஒன்று பணியாற்றிவருகிறது, டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா அவர்கள் தலைமையில். அவர்கள் அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்கள். அந்த கமிட்டி அறிக்கையைப் பொறுத்தவரையில் ஜெனரல் என்ற அளவில் என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும் என்பதற்குப் பதிலாக குற்றச்சாட்டுகள்தான் அதிகமாக இருந்தன. ஆகவே அவற்றை ஏற்றுக்கொள்ளாமல் தள்ளிவிட்டார்கள். டாஸ்க் போர்ஸ் பல்வேறு கருத்துக்கள் குறித்து. பல்வேறு பிரச்சினைகளில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க இருக்கிறார்கள். இன்னும் அரசுக்குச் சமர்ப்பிக்கவில்லை. ஒன்றிரண்டு திங்கள்களில் எதிர்பார்க்கப்படுகிறது. அது வந்தபிறகு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

Wages for Handloom weavers in Madurai

* 276 *Q.*—Thiru K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(*a*) whether it is a fact that 15,000 Handloom Weavers in Munichalai area of Madurai demanded wage increase and bonus from Master Weavers; and

(*b*) if so, the steps taken for settlement of the same?